इंडिया रिसर्व वंकि

இந்திய ரிசர்வ் வங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

ஏப்ரல் 13, 2016

## ₹ 10 மதிப்பிலக்க வங்கி நோட்டுகள் உட்பொதிந்த “L” எழுத்துடன் வெளியீடு

இந்திய ரிசர்வ் வங்கி, மகாத்மா காந்தி வரிசை 2005 ஆம் ஆண்டு வங்கி நோட்டுகளை ஆளுநர் டாக்டர் ரகுராம் G. ராஜன் அவர்கள் கையெழுத்துடன், நோட்டின் முன்புறம் வரிசை எண்களுக்கான இரு பகுதிகளிலும் “L” என்ற உட்பொதிந்த எழுத்துடன், பின்புறத்தில் நோட்டு அச்சடிக்கப்பட்ட ஆண்டு “2016“ என்று அச்சிடப்பட்ட ₹ 10 மதிப்பிலக்கத்தில் விரைவில் வெளியிடுகிறது.

நோட்டிலுள்ள இரண்டு வரிசை எண்களும் அளவில் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் வரை ஏறுமுகமாக அமைக்கப்படிருக்கும். ஆனால், முன்னிணைப்பாக உள்ள முதல் மூன்று எண் - எழுத்துக்கள் நிலையான ஒரே வடிவத்தில் இருக்கும். இந்த அம்சங்களைத் தவிர, தற்போது வெளியிடப்படவிருக்கும் நோட்டுகளின் வடிவமைப்பு எல்லாவிதத்திலும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள மகாத்மா காந்தி வரிசை - 2005, ரூ. 10 வங்கி நோட்டுகளை ஒத்ததாக இருக்கும்.




இதே போல், வடிவத்தில் ஏறுமுகத்தில் அமைந்துள்ள வரிசை எண்கள் கொண்ட ₹.50, ₹.100, ₹.500, ₹.1000 நோட்டுகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கு முன் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அனைத்து ₹ 10 மதிப்பிலக்க வங்கி நோட்டுகளும் தொடர்ந்து சட்டப்படி செல்லத்தக்கவையே.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிக்கை வெளியீடு - 2015-2016/2413**